**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்**

முன்னிலை:- திருமதி வி.கீதா, பி.ஏ.,எம்.எல்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

2021ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16-ம் நாள் வியாழக்கிழமை

***இ.ம.எண். 247/2021 in அசல் வழக்கு எண்: 113/2019***

சேகர் ...மனுதாரர்-வாதி

.....எதிர்.....

கேசவன் ...எதிர்மனுதாரர்-பிரதிவாதி

இந்த மனுவானது இன்று என்முன்னர் முடிவான விசாரணைக்காக வந்தபோது மனுதாரருக்காக அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.கே.ராமதாஸ் அவர்கள் முன்னிலை யாகியும், எதிர்மனுதாரருக்காக அறிவார்ந்த வழக்கறிஞர் திரு.ஜி.விஜயலட்சுமி, அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பையும் கேட்டறிந்து வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்த நீதிமன்றம் வழங்கிடும்....

**உத்தரவு**

இம்மனுவானது உரிமையியல் விசாரணை முறை சட்டம் பிரிவு 151-ன் கீழ் மனுதாரர் தரப்பில் இந்த அசல் வழக்குடன் OS.No.145/2019 வழக்கை இணைந்து ஒரே விசாரணையாக நடத்த உத்திரவிட கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்:**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், இந்த எதிர்மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி என்றும், தான் எதிர்மனுதாரர் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் தாக்கல் செய்துள்ளதாகவும், அதில் இந்த எதிர்மனுதாரர் எதிர்வழக்குரை தாக்கல் செய்து கட்சி செய்து வருவதாகவும், இந்நிலையில் இந்த எதிர்மனுதாரர் மனுதாரர் மீதும் இன்னொரு நபர் மீதும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கு நீதிமன்றத்தில் தாவா தாக்கல் செய்து அது அசல் வழக்கு 145-2019 என நம்பராகி நிலுவையில் இருந்து வருகிறது என்றும், தற்போது இந்த நம்பர் அசல் வழக்கு

பட்டியலில் இடப்பட்டுள்ளது என்றும், மேலும் இந்த அசல் வழக்கின் தரப்பினர்களும் சொத்துக்களும் அ.வ 145-2019 வழக்கின் தரப்பினர்களும் சொத்துக்களும் ஒன்றாக இருப்பதினால் இந்த அசல் வழக்குடன் அ.வ. 145-2019 வழக்கினையும் சேர்த்து Joint trial ஆக நடத்த உத்தரவிட வேண்டி உள்ளது என்றும், எனவே மனுதாரர் தரப்பில் இந்த அசல் வழக்குடன் OS.No.145/2019 வழக்கை இணைந்து ஒரே விசாரணையாக நடத்த உத்திரவிட கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்த ஆட்சேபனையின் சுருக்கம்:</u>**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு மினவும் காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் தனது அபிடவிட்டில் குறிப்பிட்டுள்ள அனைத்து காரணங்களையும் அவரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார் என்றும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவானது எதிர்மனுதாரரை வேண்டுமென்றே இழுத்தடிக்கும் நோக்கத்தோடு தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்றும், எனவே இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

4. இருதரப்பிலும் சாட்சி மற்றும் சான்றாவணம் இல்லை.

**5. <u>இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த இடைமனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதேயாகும்.</u>**

6. இருதரப்பு வாதங்கள் மற்றும் வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்ததில் இந்த எதிர்மனுதாரர் மனுதாரர் மீதும் இன்னொரு நபர் மீதும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கு நீதிமன்றத்தில் தாவா தாக்கல் செய்து அது அசல் வழக்கு 145-2019 என நம்பராகி நிலுவையில் இருந்து வருகிறது என்றும், இந்த அசல் வழக்கின் தரப்பினர்களும் சொத்துக்களும் அ.வ.145-2019 வழக்கின் தரப்பினர்களும் சொத்துக்களும் ஒன்றாக இருப்பதினால் இந்த அசல் வழக்குடன் அ.வ. 145-2019 வழக்கினையும் சேர்த்து Joint trial ஆக நடத்த உத்தரவிட வேண்டி கோரி மனுதாரர் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கின் வழக்கு கோப்புகளையும் அசல் வழக்கு 145-2019 வழக்கின் வழக்கு கோப்புகளையும் பரிசீலனை செய்ததில், இவ்வழக்கின் வழக்கு சொத்தும் தரப்பினர்களும், அசல் வழக்கு அ.வ.145-2019 வழக்கு சொத்தும்

தரப்பினர்களும் ஒன்றாக உள்ளது. எதிர்மனுதாரர்கள் இம்மனுவிற்கு ஆட்சேபனை தெரிவித்திருந்தாலும் வழக்குகளில் தரப்பினர்களும் சொத்துக்களும் அவர்களுக்கிடையே தீர்க்கப்பட பிரச்சினைகளும் ஒரே விதமாக அமையப்பெற்றிருப்பதால் மனுதாரர் கோரியவாறு மேற்படி வழக்குகளையும் இணைத்து ஒரே விசாரணையாக நடத்துவதால் வழக்கில் வீண் குழப்பத்தையும், நேர விரயத்தையும் தவிர்க்க இயலும். ஆகவே இம்மனுவை அனுமதிப்பதே சரியான தீர்வாகும் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

இறுதியாக, இம்மனுவானது செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்பட்டு, இந்த அசல் வழக்கு 113-2019 வழக்கை அசல் வழக்கு 145-2019 உடன் சேர்த்து நடத்தவும், OS.No.145/2019ல் ஒரே விசாரணைக்கு உத்தரவிட்டும், இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு பின்னர் இன்று 16.09.2021ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(Sd/- V.Geetha)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.